IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

**SC.No.24/2024**

dated : 09.02.2026

P.W. 5

Name - மகேஷ்

சாட்சி மீண்டும் மனுவின்பேரில் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

நான் முன்பு ஆட்டோ ஓட்டும் தொழில் செய்தேன் என்றால் சரிதான். 2018 ம் ஆண்டு ஆட்டோ ஓட்டினேன். கடையம் காவல் நிலையத்தினர் தாக்கல் செய்த பல வழக்குகளில் சாட்சியாக இருந்துள்ளேன் என்றால் சரியல்ல. தென்காசி நீதிமன்றங்களில் குற்ற வழக்கிற்காக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதீப் என்பவர் மீதான குற்ற வழக்கில் நான் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். ஆலங்குளம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நான் சாட்சியம்அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. கவியரசன் என்பவருக்கு எதிரான குற்ற வழக்கில் தென்காசி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என் சித்தப்பா மகனை தாக்கியதாக என் மீது கடையம் காவல் நிலையத்தில் ஒரு வழக்கு உள்ளது என்றால் சரிதான். கடையம் காவல் நிலையத்தில் என் மீது 3 வழக்குகளுக்கு மேல் இருந்தது என்றால் சரிதான். பல குற்ற வழக்குகளில் தொடர்புடையவர் என்பதால் கடையம் காவல் நிலையத்தை சேர்ந்தவர்கள் எனக்கு நன்கு அறிமுகமானவர்கள் என்றால் சரியல்ல. சாட்சி முருகன் என்பவர் எனக்கு சிறு வயது முதலே பழக்கம். 26.08.2018 ம் தேதி நானும், முருகனும் என்ன காரணத்திற்காக ஆலங்குளம் சென்றோம் என்று ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேன். எனது ஆட்டோவிற்கு பொருட்கள்

வாங்குவதற்காக சென்றோம். ஆலங்குளம் பாக்கியம் என்ற கடையில் பொருட்கள் வாங்கினோம். அங்கு வாங்கிய பொருட்களுக்கு ரசீது வாங்கினோமா என்று ஞாபகமில்லை. அந்த விபரத்தை ஆய்வாளரிடம் கூறினேன். ஆலங்குளத்தில் இருந்து இரவு 09.30 மணியளவில் புறப்பட்டோம். ஆலங்குளத்தில் இருந்து கேளையாப்பிள்ளையூருக்கு 20 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். கடையமும் 14 கிலோ மீட்டர் இருக்கும் என்றால் சரியல்ல. 20 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். ஆலங்குளத்தில் இருந்து அம்பை சாலை வழியாக ராம் நகர் விலக்கு, ஐந்தாம்கட்டளை, வடமலைப்பட்டி, மடத்தூர், கேளையாப்பிள்ளையூர் வழியாக ஒரு வழி உள்ளது என்றால்சரிதான். ஊருக்கு விரைவாக வர உள்ள வழி என்றால் சரிதான். பாவூர்சத்திரம் சென்று வருவதாக இருந்தால் கூடுதலாக 5 மற்றும் 6 கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சாட்சி பதில் அளிக்கவில்லை. அன்றைய தினம் நான் எந்த பாதை வழியாக கடையம் திரும்பினேன் என்று ஆய்வாளர் விசாரணையில் கூறினேனா என்றால் சொன்னேன். சத்திரம் வழியாக நண்பர்களை பார்த்து விட்டு வந்ததால் தாமதமாகிவிட்டது. மேற்படி விபரத்தை நான் தற்போது தான் முதன்முதலாக கூறுகிறேன் என்றால் ஆய்வாளர் விசாரித்த போதும் கூறினேன். ஆய்வாளர் பதிவு செய்த குவிமுச 161 வாக்குமூலத்தில் அந்த விபரங்கள் காணப்படவில்லை என்றால் சரிதான். பாவூர்சத்திரத்தில் இருந்து வரும் போது ரயில்வே நிலைய விலக்கு பக்கம் வர தேவையில்லை என்றால் சரியல்ல. நான் கூறுவது தவறு என்றும், கடையத்தில் வடக்கு பகுதியில் தான் செல்ல வேண்டும் என்றும், அவ்வாறு வருவதற்கு பொட்டல்புதூர் சாலை வழியாக செல்ல அவசியம்இல்லை என்றும், நான் கடையத்தில் இருந்து பொட்டல் புதூர் வழியாக வந்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. பாவூர்சத்திரத்தில் இருந்து வரும் போது பெட்ரோல் பல்க் அருகிலேயே பெரிய தெரு வழியாக பிரிந்து குமரேசன் காலனி, ரோஜா நகர் வழியாக கேளையாப்பிள்ளையூர் வந்து வர முடியும் என்றால் சரிதான். ஆனால் நான்அந்த வழியாக வரவில்லை. முருகனை அவரது வீட்டில் விடுவதற்காக

மட்டுமே வந்திருந்தேன் என்றால் சரிதான். நான் மட்டும் ஆலங்குளத்தில் இருந்து கடையம் வந்தாலோ, பாவூர்சத்திரம் வந்தாலோ ரயில்வே ஸ்டேசன் பக்கம் செல்ல வேண்டிய அவசியம்இல்லை என்றால் சரிதான். பாவூர்சத்திரத்தில் இருந்து கடையம் சுமார் 12 கி.மீ இடைவெளியில் உள்ளது என்றால் 15 கி.மீ இருக்கலாம்.

**நேரமின்மையின்மையின் காரணமாக ஒத்தி வைக்கப்படுகிறது**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.02.09 17:21:52 +0530